செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 413 நாள்: 13/07/17

# பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தனிவட்டாட்சியர் (ஆதிந) அலுவலக வளாகத்தில் புதியதாக திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்) என்ற அலுவலகம் துவக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்திற்கு தொகுப்பூதியத்தில் அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர் மற்றும் ஈப்பு ஓட்டுநர் தலா ஒரு (1) பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பழங்குடியினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 10 ஆம் வகுப்பு தோல்வி மற்றும் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். துப்புரவாளர் பணியிடத்திற்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு 8 ஆம் வகுப்பு தேர்ச்சி (அ) 10 ஆம் வகுப்பு தோல்வி மற்றும் இலகுரக வாகன உரிமம் பெற்றிருக்க வேண்டும். தகுதியுடைய நபர்கள் தங்கள் விண்ணப்பங்களை முழு வெள்ளைத் தாளில் விவரம் தெரிவித்து சான்றிதழ் நகல்களுடன் 20.07.2017க்குள் திட்ட அலுவலர், தனிவட்டாட்சியர் (ஆதிந) அலுவலக வளாகம், கிருஷ்ணகிரி மெயின் ரோடு, திருப்பத்தூர் - 635601 என்ற முகவரியில் விண்ணப்பிக்குமாறு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

//ஒப்பம்//
மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

செ.ம.தொ.அ
வேலூர்- 9. 13/07/17